[24th September 1956

SRI K. V. RAMASWAMI : "தமிழர்கள் பெரும் பகுதியாக வாழக் கூடிய சென்னை ராஜ்யத்திலே தமிழ் ஆட்சிமொழியாக்கப்படாதபோது இலங்கை வாழ் தமிழர்கள் தமிழ் அங்கே ஆட்சிமொழியாக இருக்கவேண்டு மென்று சொல்வதில் அர்த்தமில்லை" என்று இலங்கை சர்க்கார் சொன்ன தாகத் தகவல் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரியாய் தகவல் ஒன்று மில்லை. இங்கே யார் தமிழ் ஆட்சிமொழியாகக் கூடாதென்று நினைக்கிறார்கள் என எனக்குத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் ஒருவர்தான் அப்படிச் சொல்கிறாரோ என்று எனக்குத் தோன்றுகிறது.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House the following message, dated 19th September 1956, received from the Governor of Madras :—

"In pursuance of Article 207, clause (3), of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly the consideration of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1956."

III.—STATEMENT UNDER RULE 40 *RE* ALLEGED DELAY IN THE DISPOSAL OF TAKKAVI LOAN APPLICATIONS IN TANJORE DISTRICT.

MR. SPEAKER : I have received notice under rule 40 from Sri P. Venkatesha Sholagar calling the attention of the Minister for Revenue to a matter of urgent public importance, namely, the delay in the disposal of takkavi loan applications in Tanjore district.

9-29 a.m. SRI P VENKATESHA SHOLAGAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வருஷத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் தக்காவிக் கடன்கள் மிகவும் குறைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புயலால் பாதிக்கப்பட்ட வீடுகளைக் கட்டுவதற்குக் கொடுக்கப்பட்ட கடன்களை தக்காவிக் கடன்கள் கணக்கில் வைத்துக்கொண்டு, அதிகமாக தாங்கள் கடன் கொடுத்து விட்டதாக அதிகாரிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். நான் இந்த வருஷத்தில் 1956-ம் ௵ ஜூலை ௴ 14௳யன்று ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். விவசாயிகள் உரம், விதைகள் வாங்குவதற்குப் பணமின்றி கஷ்டப்படுகிறார்கள் என்றும் அவர்களுக்குத் துரிதமாக கடன் கொடுக்கப்படுவதற்கு உதவவேண்டுமென்றும் எழுதினேன். சென்ற வருஷத்தில் தஞ்சை ஜில்லாவில் உரத்துக் காகவும், விதைக்காகவும், உழவு மாடுகள் வாங்குவதற்காகவும் ரூ. 12 லட்சம் கடனாக ஒதுக்கப்பட்டது. முதலில் ரூ. 7 லட்சம்தான் ஒதுக்கப் பட்டது. பிற்பாடு விவசாயிகளின் கஷ்டத்தை நான் கனம் மந்திரி அவர்களிடம் நேரில் எடுத்துக் கூறிய பிறகு மேலும் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த வருஷத்திலே மிகவும் குறைவாகத் தான் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, மன்னார்குடி தாலுகாவில் ஆயிரக்கணக்கான தக்காவி கடன் மனுக்களில் நூற்றுக்கணக்கான மனுக்கள் இன்னும் பைசல் செய்யப்படவில்லை. புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அதிகமாக கடன் கொடுத்துவிட்டதாகவும், இனிமேல் புயலால் பாதிக்கப்படாத